**Tamil**
மார்ச் 2023

# இரவு வேளையில், வார இறுதியில் அல்லது பொதுவிடுமுறையின் போது மருத்துவ உதவி பெறுவது எவ்வாறு





அவுஸ்திரேலிய மருத்துவ முறைமை சிக்கலானது. நீங்களோ அல்லது உங்கள் குடும்பத்தவரோ சுகவீனமுற்றால், எந்த மருத்துவ சேவையைப் பயன்படுத்துவது, எவ்வளவு செலவாகும், எந்தெந்த நேரங்களில் திறந்திருக்கும் என நீங்கள் தெரிந்திருக்க வேண்டும். அவுஸ்திரேலியாவின் வழமையான வேலை நேரத்திற்குப் புறம்பான நேரங்களில், மருத்துவ உதவியை எவ்வாறு பெற்றுக் கொள்வது என்று மேலும் கற்றுக்கொள்ள இந்த ஆவணம் உங்களுக்கு உதவும்.

### விக்டோரியாவில் உள்ள புகலிடக் கோரிக்கையாளர்களுக்கான குறிப்பு:

மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவுகளில் நீங்கள் இலவச மருத்துவ சிகிச்சையைப் பெற்றுக் கொள்ளலாம். மற்றைய மருத்துவ சேவைகளை நீங்கள் பெற்றுக் கொள்வது நீங்கள் எவ்வகை வீசாவை வைத்திருப்பவர் என்பதைப் பொறுத்தது. நீங்கள் சேவைகளைப் பெற்றுக் கொள்ளக்கூடியமை காலப்போக்கில் மாறலாம். எனவே, எந்தெந்த சேவைகளை நீங்கள் பெற்றுக் கொள்ள முடியும் என்பதை அறிந்துகொள்ளத் தயவுசெய்து உங்கள் விடய அலுவலரை நாடுங்கள்.

## நீங்கள் சுகவீனமுற்றால் என்ன செய்வது உங்கள் மருத்துவரின் சிகிச்சையகம் மூடப்பட்டுள்ள போது.

**இரவு வேளையில், வார இறுதியில், அல்லது பொதுவிடுமுறையில் நீங்கள் சுகவீனமுற்று, உங்களுக்கு மருத்துவர் ஒருவர் தேவைப்பட்டால், இவற்றில் உள்ள மூன்றில் ஓர் இலவச மருத்துவ சேவையை நீங்கள் பயன்படுத்தலாம்.**

### தொலைபேசியின் ஊடான உதவிக்கு:

- தொலைபேசி அழைப்பூடான தாதியர் சேவை (Nurse on call) 1300 60 60 24 எனும் எண்ணில் (விக்டோரியாவில்)
- வேலை நேரத்திற்குப் புறம்பான பொது மருத்துவர் உதவி எண் (healthdirect) 1800 022 222 எனும் எண்ணில்

**மருத்துவர் ஒருவர் உங்களுடைய வீட்டிற்கு வர வேண்டுமெனில்:**

- வீட்டுக்கு வரும் மருத்துவர் (The Home Doctor) 13 74 25 எனும் எண்ணில் (விக்டோரியாவில்)

**உங்களால் ஆங்கிலத்தில் கதைக்க முடியாவிட்டால், இலவச மொழிபெயர்ப்பாளர் ஒருவர் இந்தச் சேவைகளைத் தொடர்பு கொள்ள உங்களுக்கு உதவுவார்.**

STEP 1 TIS நெஷனலை 131 450 எனும் எண்ணில் அழைத்து ஒரு மொழிபெயர்ப்பாளரைக் கோருங்கள்.

STEP 2 நீங்கள் பேசவிரும்பும் சேவையை அழைக்கும்படி TIS மொழிபெயர்ப்பாளரைக் கேளுங்கள்.

# மருத்துவமனை
# அவசர சிகிச்சைப் பிரிவு

கீழ்க்கண்டவை போன்ற, அவசர மருத்துவப் பிரச்சனைகள் உடனடியாக சோதிக்கப்படுவதற்காகவே அவசர சிகிச்சைப் பிரிவுகள் உள்ளன:

- உங்களுக்கு மூச்சுப் பிரச்சனைகள் ஏற்பட்டுள்ள நிலையில்.
- உங்களுக்கு நிற்காத, இரத்தப்போக்கு ஏற்பட்டுள்ள நிலையில்.
- உங்களுக்கு எலும்பொன்றில் உடைவு அல்லது தலையில் அடி ஏற்பட்டுள்ள நிலையில்.
- உங்களுக்கு மார்பில் வலி ஏற்பட்டுள்ள நிலையில்.

**அவசர மருத்துவத் தேவை ஏற்படின் 000 எனும் எண்ணை அழையுங்கள் அல்லது அருகில் உள்ள மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவிற்குச் செல்லுங்கள்.**

அவசர சிகிச்சைப் பிரிவுகள் எப்பொழுதும் திறந்திருக்கும் – **தினமும் -இரவும் பகலும்**. ஆனால் நீங்கள் நீண்ட நேரம் அங்கு காத்திருக்க நேரிடலாம். ஏனெனில், வருகை தந்தவர்களின் வரிசை ஒழுங்கில் அல்லாது, அதிக நோயுற்றவர்களையே அவர்கள் முதலில் கவனிப்பார்கள்.

**அவசர சிகிச்சைப் பிரிவுக்கு நீங்கள் செல்லும்போது:**

- உங்களிடம் Medicare அட்டை மற்றும் சுகாதாரப் பராமரிப்பு அட்டை இருந்தால் எடுத்துச் செல்லுங்கள்.
- தேவையெனில் மொழிபெயர்ப்பாளர் ஒருவரைக் கோருங்கள்.
- உண்பதற்கோ அருந்துவதற்கோ முன்னர் பணியாளர்களைக் கேளுங்கள்.

**எந்தவொரு தொலைபேசியில் இருந்தும் 000 எனும் எண்ணை இலவசமாக அழைக்கலாம்.**




# அம்புலன்ஸ்

## அவசர மருத்துவத்திற்கு 000 எனும் எண்ணில் அம்புலன்ஸ் ஐ அழையுங்கள்.

உங்களுக்கோ, வேறொருவருக்கோ தீவிர சுகவீனம் அல்லது காயம் ஏற்படின் துரித உதவி தேவைப்படுவதே அவசர மருத்துவம் ஆகும்.

**பின்வரும் நிலைமைகளில் அம்புலன்ஸை அழைக்க வேண்டாம்:**

- உங்களுக்குத் துரித உதவி தேவையில்லையெனில்.
- அவசரமற்ற மருத்துவ சந்திப்பு நேரம்ஒன்றிற்கு உங்களுக்குப் போக்குவரத்து தேவையெனில்.
- நீங்களாகவே அவசர சிகிச்சைப் பிரிவிற்குச் செல்ல இயலுமெனில்.

**அம்புலன்ஸ் சேவைகள் மிகவும் விலை உயர்ந்தவையாக இருக்கக்கூடும்.**

சில மாநிலங்களில் பின்வரும் நிலைமைகளில் அம்புலன்ஸ் இலவசம்:

- உங்களிடம் ஒரு Centrelink சுகாதாரப் பராமரிப்பு அட்டை உள்ளது.
- உங்களிடம் ஓர் ஓய்வூதிய சலுகை அட்டை உள்ளது.
- நீங்கள் உங்களது மாநில அம்புலன்ஸ் சேவையின் உறுப்பினராக இருந்தால்.
- அம்புலன்ஸ் சேவையை உள்ளடக்கும் தனியார் காப்பீடு உங்களிடம் இருந்தால்.

**Medicare அம்புலன்ஸ் செலவை ஏற்காது.**




ACT அரசு தயாரித்த 'Using health services in the ACT' என்ற ஆவணமே இந்த ஆவணத்திலுள்ள தரவுகளுக்கான மூலம் என்பதை அறியத்தர விரும்புகிறோம்.

centre for culture, ethnicity & health